**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்.**

முன்னிலை: **கா. நிலவரசன்,** B.A.,B.L,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 10 ஆம் நாள் புதன்க்கிழமை

**பட்டியல் வழக்கு எண்.89/2023**

**வழக்கின் சுருக்கம்**

(விதி 106 குற்றவியல் நடைமுறை விதிகள் மற்றும் நீதிமுறை படிவம் 61)

| | | |
|---|---|---|
| 1. | புகார்தாரர் | திரு. நாகலிங்கம், வ–51/2–22,<br>த/பெ.சிங்காரம்,<br>எண்.10, முத்துமாரியம்மன் கோவில் தெரு, கண்ணகப்பட்டு, திருப்போரூர். |
| 2. | எதிரியின் பெயர் | 1. வெங்கடேசன்,<br>2. வேதகிரி,<br>3. அம்பேத்,<br>4. முனுசாமி,<br>5. லோகம்மாள்,<br>6. கலா,<br>7. அரூண்குமார் |
| 3. | எதிரியின் தந்தை பெயர் | 1. தனபால்,<br>2. கஜேந்திரன்,<br>3. முனுசாமி,<br>4. கதிர்வேல்,<br>5. முனுசாமி,<br>6. கஜேந்திரன்,<br>7. தேவ் |
| 4. | எதிரியின் தொழில் | கூலி |
| 5. | எதிரியின் முகவரி | அனைவரும் வசிப்பது, முத்துமாரியம்மன் கோயில் தெரு, கண்ணகப்பட்டு, திருப்போரூர், செங்கல்பட்டு |

| | | |
|---|---|---|
| 6. | எதிரியின் வயது | 1. 52/2022,<br>2. 30/2022,<br>3. 30/2022,<br>4. 55/2022,<br>5. 50/2022,<br>6. 55/2022,<br>7. 28/2022 |
| 7. | எதிரியின் இனம்/சமுதாயம் (காண்க நீதிமுறை படிவம் 61) | – |
| 8. | குற்ற நிகழ்வு நாள் | 15.07.2022 |
| 9. | இறுதி அறிக்கை/தனி நபர் புகார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 11.11.2022 |
| 10. | எதிரி நீதிமன்றத்தில் ஆஜரான நாள் | 14.07.2025 |
| 11. | எதிரி பிணையில் சென்ற நாள் | – |
| 12. | வழக்கு அமர்வு நீதிமன்ற விசாரணைக்கு மாற்றப்பட்ட நாள் | எழவில்லை |
| 13. | விசாரணை தொடங்கப்பட்ட நாள் (பிரிவுகள் 207 மற்றும் 238 குவிமுச) | 14.07.2025 |
| 14. | விசாரணை முடிவுற்ற நாள் | 09.06.2026 |
| 15. | தீர்ப்பு/உத்தரவு நாள் | 10.06.2026 |
| 16 | எதிரிக்கு தீர்ப்பு நகல் வழங்கப்பட்ட நாள் | எழவில்லை |
| 17. | காலதாமத்திற்க்கான காரணம் | எழவில்லை |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தால் 17.02.2023 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 09.06.2026 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது, புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. A.K. சோமசுந்தரம்**, அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.D.R.மன்மதன்** அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதமும், வழக்காவணங்கள் பரிசீலித்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## தீர்ப்புரை

எதிர்கள் கடந்த 15.10.2022 அன்று காலை 10.00 மணியளவில் திருப்போரூர், கண்ணகப்பட்டு கிராமத்தில் உள்ள புல எண்.3/2 புதிய புல எண்.267/3 ல் அமைந்துள்ள புகார்தாரருக்கு சொந்தமான 1160 ச.அ மனையை அபகரிக்கும் பொருட்டு பயங்கர ஆயுதங்களுடன் நுழைந்து புகார்தாரரை ஆபாசமாக திட்டியதாகவும், தாக்க முனைந்ததாகவும், தடுக்க வந்த அவரது மனைவி காஞ்சனா என்பவரை தலைமுடியை பிடித்து இழுத்து தாக்கியதாகவும், அங்கிருந்த 2 அடி நீளம் உள்ள 4 இரும்பு ஆங்கில்களையும், 18 அடி நீளம் உள்ள 5 இரும்பு பைப்புகளையும், 50 அடி நீளமுள்ள கம்பி வலைகளையும் எதிரிகள் திருடிச் சென்றதாகவும், புகார்தாரருக்கு கொலை மிரட்டல் விடுத்ததாகவும், எனவே எதிரிகள் மீது பிரிவுகள் 147, 148, 294(பி), 354, 323, 379, 506(i) இதச மற்றும் பிரிவு 4 தமிழ் நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் புகார்தாரர் பிரிவு 200 கு.வி.மு.ச கீழ் இத்தனி நபர் புகாரை தாக்கல்

செய்துள்ளார்.

2. இத்தனி நபர் புகார், புகார்தாரரின் பிரமாண வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டு, பிரிவு 148, 294(b), 323, 506(ii), 379 இ.த.ச மற்றும் பிரிவு 4 த.பெ.வ.த.ச கீழ் இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு புகார் நகலுடன் அழைப்பானை அனுப்பப்பட்டது. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் தோன்றிய பிறகு புகார்தாரர் தரப்பு விசாரணை துவங்கப்பட்டது.

**<u>3. புகார்தாரர் தரப்பு வழக்கின் சுருக்கம் :–</u>**

i. புகார்தாரர் கடந்த 2008 ஆம் ஆண்டு திருப்போரூர் கண்ணகப்பட்டு கிராமத்தில் புல எண்.3/2 புதிய புல எண்.267/3 ல் உள்ள 1160 ச.அ மனையை பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலமாக கிரையம் பெற்று, அனுபவ சுவாதீனத்தில் இருந்து வருகிறார். இந்நிலையில், அச்சொத்தை புகார்தாரரிடம் இருந்து அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் எதிரிகள் தங்கள் அடியாட்களுடன் பயங்கர ஆயுதங்களுடன் கடந்த 15.10.2022 அன்று காலை 10.00 மணியளவில் அந்த சொத்திற்குள் நுழைந்து, புகார்தாரரை ஆபாசமாக திட்டி, ஒழுங்காக இந்த இடத்தை விட்டு ஓடிவிடு, உனக்கு உயிர் மேல் ஆசை

இருந்தால் இந்த இடத்தில் கால் வைக்காதே என்று கொலை மிரட்டல் விடுத்து அந்த சொத்தை அபகரிக்க முயற்சி செய்தார்கள்.

ii. மேலும் இராஜி என்பவர் கத்திய்யை காட்டி உன்னை வெட்டி கூறு போட்டுவிடுவேன் என்று மிரட்டியதால், அதை தடுக்க வந்த புகார்தாரரின் மனைவி காஞ்சனா என்பவரை ராஜி என்பவர் அவரது தலைமுடியை பிடித்து இழுத்து தாக்கியுள்ளார். மேலும் அவர்கள் இருவரையும் மிரட்டி அங்கிருந்து விரட்டி விட்டுவிட்டு அங்கிருந்த 12 அடி நீளம் உள்ள நான்கு இரும்பு ஆங்கில்களையும், 18 அடி நீளம் உள்ள 5 இரும்பு பைப்புகளையும், 50 அடி நீளமுள்ள கம்பி வலைகளையும் எதிரிகள் திருடிச் சென்றுள்ளார்கள். எனவே அது சம்பந்தமாக திருப்போரூர் காவல் நிலையத்தில் அன்றைய தினமே புகார்தாரர் புகார் அளித்துள்ளார்.

iii. மேலும் காவல் உயர் அதிகாரிகளுக்கும் தபால் மூலமாக புகார் அளித்துள்ளார். இந்நிலையில் கடந்த 03.10.2022 அன்று 1ம் எதிரி புகாதாரரை சந்தித்து அவர் கொடுத்த புகாரை திரும்பப் பெற வேண்டும் என்று மிரட்டல் விடுத்துள்ளார். இருப்பினும் புகார்தாரர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மீது போலீசார் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததால் இந்த தனி நபர் புகார் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. புகார் சங்கதிகளை சார்ந்து புகார்தாரர் பு.சா.1 ஆக சாட்சியம்

அளித்துள்ள நிலையில், அவர் தரப்பில் எவ்வித ஆவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

4. இத்துடன் புகார்தாரர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. எனவே புகார்தாரர் தரப்பு சாட்சியம் மற்றும் வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றங்களுக்கு முதல் தோற்ற வழக்கு காணப்பட்டதால் எதிரிகளுக்கு எதிராக பிரிவுகள் 294(பி), 379 மற்றும் 506(1) இதச–வின் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டு, எதிரிகளுக்கு தமிழில் படித்து காட்டி வினவியபோது எதிரிகள் அதனை மறுத்தனர். எதிரிகள் தரப்பில் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்ய போதிய வாய்ப்புகள் வழங்கியும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

5. புகார்தாரர் தரப்பு சாட்சியத்தில் எதிரிகளுக்கு எதிராக சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் குறித்து பிரிவு 313(1)ஆ குவிமுச–வின் கீழ் வினவியபோது, எதிரிகள் தங்களுக்கு எதிரான சாட்சியங்களை மறுத்துள்ளனர். மேலும் எதிரிகள் தரப்பில் சாட்சிகளும், சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தவில்லை. எனவே எதிரிகள் தரப்பு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

6. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனத்துடன்

பரிசீலிக்கப்பட்டது.

**இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில், எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் புகார்தாரர் தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.**

7. எதிரிகள் புகார்தாரரை பொது இடத்தில் ஆபாசமாக திட்டியதாகவும், கொலை மிரட்டல் விடுத்ததாகவும் மற்றும் அவருக்கு சொந்தமான இடத்திலிருந்து 12 அடி நீளம் உள்ள இரும்பு ஆங்கிள்கள் 4, 18 அடி நிலம் உள்ள 5 இரும்பு பைப்புகள் மற்றும் 50 அடி நீளமுள்ள கம்பிவலை ஆகியவற்றை திருடியதாக குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது.

8. புகார்தாரர் தாக்கல் செய்துள்ள இத்தனிநபர் புகாரில், எதிரிகள் புகாதாரருக்கு சொந்தமான மனையை அபகரிக்கும் நோக்கோடு, கடந்த 15.07.2022 அன்று காலை 10.00 மணியளவில், தங்கள் அடியாட்களுடன் பயங்கர ஆயுதங்களுடன் உள்ளே நுழைந்து அங்கிருந்த புகார்தாரரை ஆபாசமாக திட்டியதாகவும், தாக்க முனைந்ததாகவும், கத்தியை காட்டி கொலை செய்துவிடுவோம் இங்கிருந்து ஓடிவிடு என்று கொலை மிரட்டல் விடுத்ததாகவும், அதை தடுக்க வந்த அவரது மனைவி காஞ்சனா என்பவரின்

தலைமுடியை பிடித்து இழுத்து தாக்கியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

9. ஆனால் புகார்தாரர் இந்நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டபோது, எதிரிகள் தனது சொத்திற்க்குள் நுழைந்து தன்னை ஆபாசமாக திட்டி, கொலை மிரட்டல் விடுத்ததாகவும், அங்கு இருந்த கட்டுமான பொருட்களை எடுத்துச்சென்று விட்டதாக மட்டுமே குறிப்பிட்டுள்ளார். அவரது சாட்சியத்தில், எதிரிகள் எத்தகைய வார்த்தைகளால் அவரை திட்டினார்கள்? எவ்வாறு கொலை மிரட்டல் விடுத்தார்கள்? என்னென்ன கட்டுமான பொருட்களை எடுத்துச் சென்றார்கள்? சம்பவத்தில் குறிப்பாக யாரெல்லாம் ஈடுப்பட்டது என்பது குறித்தும் எவ்வித சங்கதிகளும் காணப்படவில்லை.

10. மேலும் எதிரிகள் புகார்தாரின் மனைவியின் தலைமுடியை பிடித்து இழுத்து தாக்கியதாக புகார் சங்கதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், மேற்கண்ட குற்றச்சாட்டு சம்பந்தமாக புகார்தாரரின் சாட்சியத்தில் எவ்வித சங்கதிகளும் காணப்படவில்லை. மேலும் சம்பவமானது பகல் வேளையில் நடந்துள்ள நிலையில், மேற்கண்ட சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளும், புகார்தாரரின் மனைவி காஞ்சனா என்பவரும் புகார்தாரர் தரப்பில் சாட்சிகளாக விசாரணை செய்யப்படவில்லை.

11. மேற்கண்ட சூழ்நிலையில், புகார்தாரர் சம்பவம் குறித்து திருப்போரூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக புகாரில் குறிப்பிட்டுள்ள நிலையில், அந்த புகார் கொடுக்கப்பட்டதற்கான எவ்வித ஆவணங்களும் புகார்தாரர் தரப்பில் சான்றாவணங்களாக குறியீடும் செய்யப்படவில்லை. எனவே எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்த பு.சா.1ன் சாட்சியம் மட்டுமே போதுமானதாக இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

12. எனவே புகார்தாரர் தரப்பில் முன்னிறுத்தபட்ட சாட்சியத்தின் வாயிலாக, எதிரிகள் புகார்தாரரை பொது இடத்தில் ஆபாசமாக திட்டியதாகவும், கொலை மிரட்டல் விடுத்ததாகவும் மற்றும் அவருக்கு சொந்தமான இடத்திலிருந்து 12 அடி நீளம் உள்ள இரும்பு ஆங்கிள்கள் 4, 18 அடி நிலம் உள்ள 5 இரும்பு பைப்புகள் மற்றும் 50 அடி நீளமுள்ள கம்பிவலை ஆகியவற்றை திருடியதாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் புகார்தாரர் தரப்பில் சந்தேகத்திற்க்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**இறுதியாக, இத்தனிநபர் புகாரை தள்ளுபடி செய்து எதிரிகளை பிரிவுகள் 294(பி), 379 மற்றும் 506(1) இதச-வின் கீழ் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து எதிரிகளை பிரிவு 248(1) கு.வி.மு.ச வின் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

வழக்கு சொத்து இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பிறகு இன்று (10.06.2026) இத்திறந்த நீதிமன்றத்தில் இவ்அவையறிய பகரப்படுகிறது.

NILAVARASAN KASI
Digitally signed by NILAVARASAN KASI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருப்போரூர்.**

**புகார்தாரர் தரப்பு சாட்சிகள் :–**

| | |
|---|---|
| பு.சா.1 | திரு. நாகலிங்கம் (புகார்தாரர்) |

**புகார்தாரர் தரப்பு சான்றாவணங்கள் மற்றும் சான்றுப்பொருள்கள் :–** இல்லை.

**எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுப்பொருள்கள்** –

இல்லை.

NILAVARASAN KASI
Digitally signed by NILAVARASAN KASI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருப்போரூர்.**